கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

## TAMIL

வகுப்பு 6

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

**உள்ளடக்கம்**


- பத்திரிக்கைச் செய்தி
- கடிதம்
- அனுபவக் குறிப்பு
- பாராட்டுக் கடிதம்
- வினா நிரல்
- பாடலை முழுமையாக்குதல்

# பத்திரிக்கை செய்தி

**பாரம்பரியத்தை பாதுகாக்கும் விவசாயியைப்பற்றிய பத்திரிக்கை செய்தியை வாசிப்போம்.**



**பாரம்பரிய விவசாய கருவிகளை பாதுகாக்கும் குமரி விவசாயி**

திருவட்டார், அக்.20-
பாரம்பரிய விவசாய கருவிகளை குமரி விவசாயி பாதுகாத்து வருகிறார்.

நெல் விதைப்பில் இருந்து அறுவடை வரை தற்போது அனைத்தும் எந்திரமயமாகிவிட்டது. இன்று நவீன தொழில்நுட்பத்துடன் கருவிகள் பல வந்தாலும் பாரம்பரிய கருவிகளுக்கு ஈடு எதுவுமே இல்லை என்பது தான் உண்மை.

நெல் சாகுபடி செய்யும்போது, வயலில் உழுவதற்கு, சமப்படுத்துவதற்கு, வயலில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு, அறுவடை நேரத்தில் நெல்லை அளப்பதற்கு என பலவகையான கருவிகளை நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்தனர். அந்த கருவிகளை குமரி மாவட்டம் துவரங்காட்டை சேர்ந்த விவசாயி செண்பகசேகரன் பிள்ளை பாதுகாத்து வருகிறார்.

பத்திரிகைச் செய்தியை வாசித்தீர்கள் அல்லவா?
நமது பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழா நிகழ்ச்சியை ஒரு பத்திரிக்கைச் செய்தியாக எழுதுவோம்.

**கவனிக்க வேண்டியவை**

- முக்கிய கருத்தை வெளிப்படுத்தும் தலைப்பு
- சிறப்பான தொடக்கம், படிப்படியான வளர்ச்சி
- கவர்ச்சி. தெளிவு
- நேரடியாக செய்தியைக் கூறுதல்.

# கடிதம்

விளையாட்டில் ஆர்வம் கொண்ட வட்டப்பாறை அரசு நடுநிலைப்பள்ளி மாணவர்கள் பள்ளியில் விளையாட மைதானம் இல்லாததால் கவலைப்பட்டனர். அப்பள்ளி மாணவர்கள் பஞ்சாயத்து தலைவருக்கு ஒரு மைதானம் உருவாக்கித் தருமாறு கோரிக்கை மனு அளித்தனர். அவர்களின் கோரிக்கை மனுவை வாசிப்போமா!

## கோரிக்கை மனு

அனுப்புநர்

பள்ளி மாணவர்கள்
அரசு நடுநிலைப் பள்ளி,
வட்டப்பாறை.

பெறுநர்

திரு. சுனில்குமார்,
பஞ்சாயத்து தலைவர்,
வட்டப்பாறை பஞ்சாயத்து.

ஐயா,

பொருள் : பள்ளியில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தருவது தொடர்பாக.

எங்கள் பள்ளியில் ஏறத்தாழ 300 மாணவர்கள் பயிலுகின்றனர். விளையாடுவதற்கு பள்ளியில் ஒரு மைதானம் இல்லாததால் மாணவர்களுக்கு தங்கள் திறனை வளர்க்க இயலவில்லை. ஆகவே விளையாடுவதற்கு ஒரு மைதானம் அமைத்துத் தர வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாள் : 22.11.2022 — இவண்
இடம் : வட்டப்பாறை — பள்ளி மாணவர்கள்

**கடிதத்தின் வகைகள்**

- பாராட்டுக் கடிதம்
- நட்புக் கடிதம்
- அலுவல் கடிதம்
- புகார் கடிதம்
- கோரிக்கை மனு
- விடுப்புக் கடிதம்

அரசு நடுநிலைப்பள்ளி வட்டப்பாறையிலுள்ள மாணவர்கள் எழுதிய கோரிக்கை மனுவை வாசித்தீர்கள் அல்லவா! இது போன்று நமது பள்ளிக்குத் தேவையான கணினி ஆய்வகம் அமைப்பதற்காக ஒரு கோரிக்கை மனு எழுதுவோம்.

# அனுபவக் குறிப்பு

கடந்த மாதம் கொண்டாடிய தனது பிறந்த நாளைப் பற்றி நினைத்த அருண் அதை ஒரு குறிப்பாக எழுதினான். அருண் எழுதிய அனுபவக்குறிப்பை வாசிப்போம்.

| |
|---|
| அதிகாலையில் எழுந்தேன். இன்று என் பிறந்தநாள் கொண்டாடும் தித் திப்பில் இருந்தேன். குளித்து புத்தாடை அணிந்தேன். அம்மா பலவித பலகாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள். வாசலுக்குச் சென்றேன். வாசலில் புத்தம்புதிய சைக்கிள். அப்பா அதை என்னிடம் தந்தார். என் பல நாள் கனவு. மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தேன். அது மட்டுமல்ல உற வினர்களின் பரிசுகள். நண்பர்களின் பரிசு என மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அம்மா அனைவருக்கும் விருந்தளித்தார். அந்த நாள் என் வாழ்வில் மறக்கமுடியாத நன்னாள். |

- அருணின் பிறந்தநாள் அனுபவத்தை வாசித்தீர்கள் அல்லவா? இதுபோன்று உங்கள் பள்ளியிலோ வீட்டிலோ நடைபெற்ற விழா அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.

**கவனிக்க வேண்டியவை**

- சொந்த அனுபவங்களை உணர்வு பூர்வாக வெளியிடல்.
- நிகழ்வுகளை வரிசையாகவும் முழுமையாகவும் வெளியிடல்
- ஏற்ற மொழிநடை
- வாக்கிய அமைப்பு, குறியீடு பயன்படுத்துதல்.

# பாராட்டுக் கடிதம்

உலக அளவிலான சதுரங்கப் போட்டியில் சர்வதேச வீரரான மேக்னஸ் காட் சனை தோற்கடித்து வெற்றிபெற்ற சென்னையைச் சேர்ந்த பிரக்கானந்தாவைப் பாராட்டி எழுதிய ஒரு கடிதம் தரப்பட்டுள்ளது. கடிதத்தை வாசிப்போமா!

**பாராட்டுக் கடிதம்**

22.11.2022
உறையூர்

மதிப்பிற்குரிய பிரக்கானந்த்,

நீங்கள் சர்வதேச சதுரங்க வீரரான மேக்னஸ் காட்சனை எதிர்த்து சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்ற விவரத்தை பத்திரிக்கையிலிருந்து தெரிந்து கொண்டேன். மகிழ்ச்சியாக இருந்தது. நீங்கள் இனியும் பல விரு துகளைப் பெற வாழ்த்துகிறேன். உங்கள் புகழ் உலகெங்கும் பரவட்டும்.

வாழ்க! வளர்க!

இப்படிக்கு
ராகுல்

பெறுநர்
பிரக்கானந்த்
10/17 பிரசாந்த் நகர்
சென்னை

**கவனிக்க வேண்டியவை**

- கடிதத்தின் அமைப்பு
- பாராட்டுவதற்கு காரணம் விளக்கப்பட்டுள்ளது.
- ஏற்ற மொழிநடை
- கடிதத்தின் கருத்து முழுமை
- தவறின்றி எழுதப்பட்டுள்ளது.

இதுபோன்று உங்கள் உபமாவட்டத்தில் நடைபெற்ற கலைவிழாவில் பரதநாட்டிய போட்டியில் வெற்றிபெற்று மாவட்ட கலை விழாவிற்கு செல்கின்ற உமேஷைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுங்கள்.

# வினாநிரல்

மாநில பள்ளி அளவிலான விளையாட்டுப் போட்டியில் ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்ற மாதேஷை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரிக்கப் பட்டுள்ளதைப் பாருங்கள்.

- நீங்கள் ஓட்டப் பந்தையத்தைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?
- எத்தனை வயது முதல் இப்போட்டியில் கலந்து கொண்டீர்கள்?
- உங்களின் திறமையை கண்டறிந்தவர் யார்?
- இதுவரை எத்தனை பரிசுகள் பெற்றுள்ளீர்கள்?
- உங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு எது?
- ஓட்டப்பந்தயம் மட்டுமின்றி வேறு ஏதேனும் போட்டிகளில் பரிசு கிடைத் துள்ளதா?
- உங்கள் இலட்சியம் என்ன?
- விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

இதுபோன்று உங்கள் பள்ளிக்கு வருகை தரும் மாஜிக் நிபுணர் டாக்டர் முதுகாடு அவர்களை நேர்காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

- 
- 
- 
- 
- 
- 
- 
- 

**கவனிக்க வேண்டியவை**

- வினாக்களின் சுருக்கம் தெளிவு
- பேட்டி காண்போரின் சிறப்புகளை வெளிப்படுத்தும் கேள்விகள்
- வினாக்களின் படிப்படியான வளர்ச்சி
- சூழலுக்கேற்ற வினாக்கள்

# பாடலை முழுமையாக்குதல்

அனைவருக்கும் பாடல் பிடிக்குமல்லவா! அதிலும் மழையைப் பற்றிய பாடல் என்றால் மிகவும் பிடிக்கும் இங்கு மழை என்ற பாடல் முழுமையற்றதாக கொடுக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக்குங்கள்.

**<u>மழை</u>**

மழையே, மழையே - நீயே!
சிறு சிறு துளியாய் விழுகின்றாய்!
பூமியில் ஜில்லென்று பொழிகின்றாய்
மாந்தர் மனதை நனைக்கின்றாய்
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**கவனிக்க வேண்டியவை**

- ராகம், தாளத்திற்கு ஏற்றாற் போல் சொற்கள் பயன்படுத்துதல்.
- கவர்ச்சியும் தெளிவும்
- கருத்திற்கேற்றவாறு முழுமை செய்தல்.
- பாடலுக்கு ஏற்ற கவிநயம் மிகுந்த சொற்கள்.
- பாடலின் முழுமை.